1968 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தென்னங்கன்றுகள் வைத்து தென்னந்தோப்புகளை அபிவிருத்தி செய்யும் வேலையை வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவர் கண்காணித்து வருகிறார். கனம் உறுப்பினர் அவர்கள், எந்த அரசாங்கத்தாலும் இந்தப் பணம் கொடுக்கப்பட்டது என்று கேட்டார். அவருக்கு சந்தேகம் வந்திருக்க வேண்டியதில்லை. இப்போதிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்—அண்ணா அரசுதான்—இந்தப் பணத்தைக் கொடுத்தது.

Suspension of Assistant in Animal Husbandry Department.

*52 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether an Assistant in Animal Husbandry Department in Chingleput district is kept under suspension for the last five years ; and

(b) if so, the charges framed against him and the reasons for not arriving at a final decision in the matter?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம். உதவியாளர் (Assistant.) ஒருவர் 1—8—1966 முதல் வேலையிலிருந்து தாற்காலிக தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டார்.

(இ) அந்த உதவியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவரை எழுத்தர் வேலைக்குத் தாழ்த்தி இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு

*** 53 வினா.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நடமாடும் கால்நடை மருத்துவ யூனிட் ஒன்றை ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏற்படுத்தும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சில இடங்களில் கோமாரி நோய் வந்து ஏராளமான அளவில் மாடுகள் இறந்துவிடுகின்றன. அவசர காலத்திற்கு மாவட்ட ஆஸ்பத்திரிக்குச் செல்வது என்பது முடியாத நிலைமையாக இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும் நடமாடும் கால்நடை மருத்துவமனையை வைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் இப்பொழுது நடமாடும் கால்நடை மருத்துவ யூனிட் இருந்து வருகிறது. அவசர கேஸ்களைக் கவனிப்பதற்கு இது உதவிகரமாக இருக்கும்.

[1968 ஆகஸ்ட் 20

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை டாக்டர்கள் கிராமங்களுக்கு வர வேண்டுமென்றால் டாக்சி வைத்துக் கொண்டு வரச் சொல்கிறார்கள். அப்படி டாக்சிகளில் அழைத்துக் கொண்டுபோய் சிகிச்சை முடிந்தபிறகு பணம் கேட்கிறார்கள். பணம் கொடுக்காவிட்டால், மறுநாளைக்கு சிகிச்சை செய்ய வர மறுக்கிறார்கள். இம்மாதிரியான நிலைமை களைப்போக்க அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கால்நடை மருத்துவர்கள் தங்களுடைய தினசரி வேலைநேரம் போக ஓய்வு நேரங்களில் அருகிலுள்ள கிராமங்களில் சிகிச்சைக்குப் போய் வருகிறார்கள். சிலர் கார் வைத்து அவர்களை அழைத்துப் போகிறார்கள். சிலர் சொந்தக் கார்களில் அவர்களை அழைத்துப் போகிறார்கள். கார் கொண்டுவந்தால்தான் வருவேன் என்று சொல்வது தவறு. ஆனால் நீண்ட தூரமாக இருந்தால் கார் இல்லாமல் எப்படிப் போவது, அவ்வளவு தூரம் நடந்துபோக முடியாது.

ஹாஜி ம. மு. பீர். முஹம்மது : தலைவர் அவர்களே, கால் நடைகளுக்காக நடமாடும் மருத்துவமனை மாவட்டத்திற்கு ஒன்று இருப்பது போதிய அளவில் பயன்பட முடியாத நிலைமை இருப்பதால், ஊராட்சிஒன்றியங்களுக்கு ஒன்று அல்லது வட்டத்திற்கு ஒன்று என்ற அளவில் இருக்குமானால் திடீர் திடீர் என்று ஏற்படும் நோய்களிலிருந்து இறந்துபோகும் கால்நடைச் செல்வங்களை நாம் காப்பாற்ற முடியும். ஆகவே, வட்டத்திற்கு ஒன்றோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒன்றோ என்ற அளவில் நடமாடும் மருததுவ மனை வசதியை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ? அப்படி அரசாங்கம் ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிதிநிலை அதற்குச் சாத்தியமாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 54, 55 இரண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விருப்பப்படி ஒத்தி வைக்கப்படுகின்றன.

நில அடைமான வங்கி, குடியாத்தம்

* 56 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1965 டிசம்பரில் குடியாத்தம் தாலுக்கா கூட்டுறவு நில அடைமான பேங்கு நிர்வாகஸ்தர்களுக்கான தேர்தல், தலைவர் தலைமையின்கீழ் நடந்ததா ?

(இ) அது முறையாக நடைபெறவில்லையென்று வடார்க்காடு மாவட்டம் டெபுடி ரிஜிஸ்ட்ராருக்கு அப்பீல் செய்யப்பட்டதா ?